திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் கலைக் கல்லூரிகள் துவங்குவதை நிறுத்தி வைத்து இருப்பது நிரந்தரமானதா? அல்லது 1984–85-ல் மறு பரிசீலனைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா? தனியார்கள் சேர்ந்த இயக்கங்கள், சமூக நல ஸ்தாபனங்கள் மூலமாக புதிய கல்லூரிகள் துவக்குவதற்கு முன் வருமானால் அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரி திறக்கக் கூடாது என்பது நிரந்தரமான முடிவு அல்ல. நிரந்தரமான முடிவாக இருந்தால் இப்போது இருக்கும் கல்லூரிகளையே மூட வேண்டி இருக்கும். கொள்கை அளவில் இப்போது நாம் திறக்கப் போவது இல்லை என்று முடிவு எடுத்து இருக்கிறோம். பிறகு நம்முடைய நிலைமைகளையும், தேவைகளையும் பாடத் திட்டங்களில் ஏற்பட்டு இருக்கிற மாறுதல்களையும் வைத்து நாம் பிறகு அதைப் பற்றி முடிவு செய்யலாம்.

வீடுர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

116—(*வினா எண். 18808)—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திண்டிவனம் கல்வி மாவட்டம் வீடுர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டும் பணி துவக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

(ஆ) எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) திண்டிவனம், வீடுர் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக கடும் வறட்சியினால் ஏற்பட்ட தண்ணீர்ப் பஞ்சத்தினால் ஒப்பந்தக் காரர் இப்பணியைச் செய்ய இயலவில்லை.

(ஆ) அண்மையில் பெய்த மழை காரணமாக, கிடைத்து உள்ள தண்ணீர் வசதியைக் கொண்டு கட்டடப் பணி ஆரம்பிக்கப் பட்டு, தற்போது மேல் தளம் அளவில் கட்டப்பட்டுள்ளது.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஏடு தூக்கி நாளைய தினம் நாட்டைக் காக்க இருக்கின்ற மாணவர்களுக்கு பள்ளிக்கூட வசதி இல்லாமல் சுற்றுப்புற சூழ்நிலைகளைக் கவனித்துக் கொண்டு பாடம் போதிக்கின்ற ஆசிரியர்களை கவனிக்காமல் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட காரணத்தால் அந்த உயர் நிலைப் பள்ளிக் கட்டிடத்தை உடனடியாக கட்டித் தர அரசு முன் வருமா என கேட்க ஆசைப்படுகிறேன்?

1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை ஆரம்பிக்கப்பட்டு மேல் தளம் வரை கட்டப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது. விரைவில் இந்தப் பணி முடிக்கப்படும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து இருக்கிறார்.

மாவட்ட அளவில் அதிகாரிகள்— ஆசிரியர்கள் அடங்கிய கல்விக் குழுவினை அமைக்கும் திட்டம்

117—(*வினா எண். 19226)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மற்றும் திரு சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் அதிகாரிகள்-ஆசிரியர்கள் அடங்கிய கல்விக் குழுவை அரசு அமைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) அவ்வப்போது ஏற்படும் ஆசிரியர்களின் குறைகளைக் களைய கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவிலான மூன்றடுக்கு ஆசிரியர் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்தது. அதில் கல்வி மாவட்ட ஆசிரியர் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கானது).

1. மாவட்டக் கல்வி அதிகாரி ..	தலைவர்.
2. கல்வி மாவட்ட தலைமையிடத்து உதவிக் கல்வி அலுவலர்.	உறுப்பினர். செயலாளர்.
3. கல்வி மாவட்டத்திலுள்ள அனைத்து உதவிக் கல்வி அலுவலர்கள்.	உறுப்பினர்.
4. அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் கல்வி மாவட்ட அமைப்பின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் இருவர் (ஆசிரியர் பணியில் உள்ளவர்கள்).	உறுப்பினர்.